நாள்.07.03.2018

அ.வ.எண்.301/2014

பி.வா.சா.1. நைனார் ஆசாரி

சாட்சி அழைக்கப்பட்டு பிரமாணத்தின் பெயரில் வாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் தங்கநகை செய்யும் வேலை செய்கிறேன். இந்த வழக்கின் 4ஆம் பிரதிவாதி என் உறவினர் இல்லை. அவர் வேறு வழக்கறிஞர்மூலம் வழக்காடுகிறார். அவர் என்னை அவருக்காக சாட்சியமளிக்கவேண்டுமென்று அதிகாரப்படுத்தி எழுதித்தரவில்லை. அவருக்காக சாட்சியமளிக்கும் விபரத்தினை அவரிடம் தெரிவித்துள்ளேன். அவர் உடல்நிலை சரியில்லாமல் உள்ளார். அதற்கு மருத்துவ சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தின் புல எண் பி.9/66. இதன் பழைய புல எண் தெரியாது. அது வடிவீஸ்வரம் கிராமத்தில் உள்ளது. அதற்கு மேற்கு பக்கம் மணி ஐயர் சொத்து, கிழக்கே தெரு, வடக்கு பக்கம் சாலியார் பீவி சொத்து, தெற்கு பக்கம் செய்யது பீவி சொத்தும் உள்ளது. இது ஆவணப்படியான எல்கையாகும். இது 2.50சென்ட்டிற்கு உரிய எல்கையாகும். நான் கிரயம் வாங்கும் நேரத்தில் 2.50சென்டிற்கும் இதே எல்கைதான் இருந்தது. தற்போதைய எல்கைகள் மேற்கே பகவதி சுப்பிரமணிய சொத்து, கிழக்கே தெரு, வடக்கு பக்கம் அம்பிகா சொத்து, தெற்கே ஆறுமுகம் சொத்தும் உள்ளது. வழக்குரையினை படித்துப் பார்த்தேன். அதன் எல்கைகளையும் படித்துபார்த்தேன். அதில் கூறியுள்ள எல்கைகள் சரியானவைதான். அவை பழைய எல்கைகள் ஆகும். வழக்கு சொத்து ஆரம்பகாலத்தில் ரத்தினசாமி தேவரின் தந்தையின் சகோதரி செல்லம்மாளுக்கு பாத்தியப்பட்டிருந்தது. அவர் அதனை ரத்தினசாமி தேவருக்கு எழுதிவைத்ததாக ரத்தினசாமி தேவர் சொன்னார். அந்த ஆவணத்தினை நான் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதுதான் சொத்தின் பூர்வீக ஆதாரம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நான் படித்துப் பார்த்தேன். அந்த ஆவணத்தில் செல்லம்மாளுக்கு குழந்தை இல்லாததால் அவரை பராமரிக்கும் பொருட்டு ரத்தினசாமி தேவருக்கு எழுதிக்கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது. அதன்பெயரில் ரத்தினசாமி தேவருக்கு பட்டா, தீர்வை ஏற்பட்டது. அதனை நான் தாக்கல் செய்தேனா? என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அந்த ஆவணங்களை தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அரசு ஆவணங்களில் செல்லம்மாள் பெயரிலிருந்து ரத்தினசாமி தேவர் பெயரில் பெயர்மாற்றம் ஏற்பட்டதை நான் பார்த்துள்ளேன். எந்த ஆண்டு அந்த ஆவணத்தை எழுதிக்கொடுத்தார் என்று எனக்குத் தெரியாது. எந்த ஆண்டு ரத்தினசாமி தேவர் பெயருக்கு பட்டா, தீர்வை மாற்றம் செய்யப்பட்டது என்று தெரியாது. ரத்தினசாமி தேவர் உடன்பிறந்தவர்கள் எத்தனை

WEB COPY

பேர் என்று தெரியாது. செல்லம்மையின் கணவர் பெயர் தெரியாது.

குறுக்கு விசாணையின் தொடர்ச்சி வாதி வழக்கறிஞர்வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

WEB COPY